# MyReport *Plus*

# வழிகாட்டிக் கைந்நூல்

CRIB

ශ්‍රී ලංකා ණය තොරතුරු කාර්යාංශය
இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்
CREDIT INFORMATION BUREAU OF SRI LANKA
தொலைபேசி: 011 2131313, தொலைநகல்: 011 2338259
மின்னஞ்சல்: info@crib.lk, இணையம்: www.crib.lk

<u>பொறுப்புத் துறப்பு</u>

இந்த ஆவணமானது, இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் தொடர்பான, இரகசிய, தனக்கேயுரிய அல்லது சட்டரீதியான சிறப்புரிமையுடைய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. தகவல்களை தவறாகப் புரிந்து கொள்ளல் அல்லது தவறாக விளங்கிக்கொள்ளல் மூலம் மற்றும் அவற்றை அந்த வகையில் பயன்படுத்துதல் மூலம் ஏற்படும் ஏதாவது இழப்பீடுகளுக்கு இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் பொறுப்பேற்காது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும். அவசியமானதும் பொருத்தமானதுமெனக் கருதும் சந்தர்ப்பத்தில் தகவல்கள் பற்றிய ஏதாவது விளக்கங்களுக்கு அல்லது அதனைச் சரிபார்ப்பதற்கு, பணியகத்துடன் தொடர்பு கொள்ளும்படி நாங்கள் ஆலோசனை வழங்குகிறோம். இந்த தகவல்களில் எந்த ஒரு பகுதியையும் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் முன்னனுமதியின்றி வெளிப்படுத்தவோ, பிரதி செய்யவோ, மீள்பிரசுரம் செய்யவோ, விநியோகிக்கவோ அல்லது வேறு எந்த வகையிலும் கிடைக்கச் செய்யவோ முடியாது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் - 2022**
**அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ளது.**

| பதிப்பு | திகதி | விளக்கம் |
|---|---|---|
| 1.0 | 22-டிசெம்பர்-2022 | இந்த வழிகாட்டிக் கைந்நூலானது, கடன் பற்றிய தகவல்களுக்காக, வர்த்தக நிறுவனமொன்றின் அல்லது தனிநபருடைய தன்னார்வத் தகவல்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் விளக்குகின்றது. |
| 2.0 | 01- மார்ச்-2024 | தயாரிப்பு பெயரை "iReport" என்பதற்கு பதிலாக "MyReport" என மாற்றியது. "MyReport Plus" என பெயரிடப்பட்ட கடன் புள்ளியுடன் கூடிய அறிக்கைக்கு மட்டுமே குறிப்பு வழிகாட்டி புதுப்பிக்கப்பட்டது. |

## உங்களது கடன் பற்றிய தன்னார்வத் தகவல்களைப் புரிந்துகொள்ளுதல்

"நிறுவன" மற்றும் "தனிநபர்" ஆகியவற்றுக்கான கடன் பற்றிய தன்னார்வத் தகவல்கள் பொதுவாக பின்வருமாறு இரண்டு வகைகளாகத் தரப்படுகின்றன:

- **MyReport Plus** - MyReport Plus refers the Comprehensive Self-Inquiry Credit Report with the Credit Score. கடன் புள்ளிகளுடனான (Credit Score), கடன் பற்றிய விரிவான சொந்த விசாரணைத் தகவல்கள்

குறிப்பு: இங்கு கடன் புள்ளிகளுடனான, கடன் பற்றிய விரிவான சொந்த விசாரணைத் தகவல்கள் அறிக்கையின் உள்ளடக்கங்கள் அனைத்தும் தனிநபருக்கான கடன் பற்றிய விரிவான சொந்த விசாரணைத் தகவல்களையும் கொண்டுள்ளன.

## கடன் பற்றிய சொந்த விசாரணைத் தகவல் அறிக்கை (MyReport Plus) என்பது என்ன?

இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தில் பங்குகளைக்கொண்டு அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து வணிக வங்கிகள், விசேட வங்கிகள், அங்கீகரிக்கபட்ட நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகள் மூலம் கடன் தகவல்கள் வழங்கப்படுகின்றன. தகவல்கள் இலத்திரனியல் முறையில் அந்நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களிலிருந்து இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு மாற்றப்படுவதுடன் ஒவ்வொரு கலன்டர் மாத இறுதியிலும் புதுப்பிக்கப்படுகின்றன. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் சட்டத்திற்கமைவாக, அனைத்து அங்கத்துவ நிறுவனங்களும் அவற்றின் வாடிக்கையாளர்களது கடன் பற்றிய தகவல்களைப் பணியத்திற்கு வழங்குவதற்குக் கட்டுப்பட்டுள்ளன.

பணியகத்தினால் சேமிக்கப்படும் கடன் தகவல்கள், தனிப்பட்ட (தனிநபர்) மற்றும் நிறுவன (வியாபாரம்) என்றவாறு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. தனிநபர்களின் கடன் தகவல்கள் அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் (இலங்கையராயின்) கீழ் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தின் கீழ் (இலங்கையரல்லாவிடின்) சேகரிக்கப்படுவதுடன், நிறுவனக் கடன்கள் பற்றிய தகவல்கள் அவற்றின் வர்த்தகப் பதிவு இலக்கத்தின் கீழ் சேகரிக்கப்படுகின்றன. இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் கடனாளிகள் (தனிநபர் மற்றும் நிறுவனம்) தொடர்பான தகவல்களைச் சேகரித்து, அந்தந்தக் கடனாளிகளுடன் தொடர்புடைய தொகுக்கப்பட்ட தகவல்களை, கடன் விசாரணை அறிக்கை வடிவில் கடன் வழங்கும் அங்கத்துவ நிறுவனங்களுக்கு அல்லது அத்தகவலுடன் தொடர்புடைய ஆளுக்கு/நிறுவனத்திற்கு வேண்டுகோளின் பேரில் வழங்குகின்றது.

தொடர்புடைய ஆளுக்கு/நிறுவனத்திற்கு வேண்டுகோளின் பேரில் வழங்கப்படுகின்ற கடன் விசாரணை அறிக்கையானது, "MyReport Plus" எனப்படும். 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க (1995 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, மற்றும் 2008 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டு) இலங்கை கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, உங்களது சொந்த கடன் விசாரணை அறிக்கையை அல்லது உங்களது நிறுவனக் கடன் விசாரணை அறிக்கையை, பணியகத்திடம் கோருவதற்கு நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

## உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கை (MyReport Plus) ஏன்முக்கியமானது?

உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையானது (MyReport Plus) கடன் வழங்குவதற்கு அதிகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்திடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட கடன்களின் விபரங்களை வெளிப்படுத்துகின்றது.

உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையில் கடனை மீள செலுத்திய சிறந்த வரலாறு உங்களுக்குக் காணப்படுமாயின், அது கடனை மீளசெலுத்தும் உங்களது நன்மதிப்புப் பண்பினைக் காட்டுவதுடன், நீங்கள் எதிர்காலத்தில் கடன் பெறும்போது, உங்களுக்குக் கடன் வழங்குபவருக்கு மிகவும் இலகுவாக நிரூபிக்க முடியும்.

உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கை பின்வரும் நன்மைகளை உங்களுக்கு தருகின்றது:

- கடன் வழங்கும் நிறுவனங்கள் உங்களது கடன் அறிக்கைகளைப் பார்ப்பதற்கு முன்னர், நீங்கள் உங்கள் கடன் அறிக்கையை கவனிக்க முடியும்.
- உங்களது மீள் செலுத்தும் வழக்கத்தை நெறிப்படுத்த உதவுதல்.
- அடிக்கடி அறிக்கையைப் பார்வையிடும்போது, உங்களது அறிக்கையில் தவறான தகவல்களை நீக்கவும் சரியானதும் நேர்த்தியானதும் தகவல்கள் காணப்படுவதை உறுதிசெய்யவும் இயலும்.
- உங்களது மறைமுகமான பொறுப்புக்களைக் கண்காணிப்பதற்கு உதவுதல்.
- உங்களை ஒழுக்கமான கடன் பெறுநராக்குதல்.

06 மாதங்களுக்கு ஒரு முறையாவது உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையைப் பெற்றுக் கொள்ளுமாறு நாங்கள் உங்களுக்குப் பரிந்துரைக்கிறோம்.

## எவ்வாறு கடனுக்குத் தகுதியான உங்களது நன்மதிப்புத் தன்மையை அதிகரித்துகொள்ளலாம்?

- எப்போதும் உங்களது மாதாந்த வருமானத்தையும் செலவினங்களையும் சமநிலைப்படுத்த முயற்சிக்கவும். மற்றும் உங்களால் திருப்பிச் செலுத்த முடியுமான அளவுக்கு மாத்திரம் கடன் பெறவும். கடனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உங்களது வழக்கமான மாதாந்தச் செலவினங்களான மின்சாரம், தண்ணீர், தொலைபேசி போன்றவற்றின் செலவுகள் பற்றிக் கவனத்தில் கொள்வது விவேகமானது.
- கடன் பெறுவதற்கு முன்னர், கடன் தொடர்பான நியதிகள் மற்றும் நிபத்தனைகள் பற்றி கடன் வழங்குனருடன் ஆலோசித்து, கடன் தொடர்பான சரியான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளவும்.
- ஒப்புக்கொள்ளப்பட்டவாறு செலுத்தப்பட வேண்டிய தவணைப்பணமானது செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தவணைப்பணத்தை முடியுமானால் உடன்பட்ட நேரத்திற்கு முன்பதாகவே செலுத்துவது சிறந்ததாகும். முக்கியமாக, கடன் அட்டைகளுக்கான கொடுப்பனவுகளை அவ்வாறு செலுத்துதல் உங்களின் கடன் நன்மதிப்புத் தன்மையைப் பேணுவதில் உதவும்.
- நீங்கள் கடனொன்றிற்குப் பிணையாளியாகும்போது, கடன் பெறுநரின் திருப்பிச் செலுத்தும் திறன் தொடர்பாக தெளிவாகப் புரிந்துக்கொண்டிருக்க வேண்டியது முக்கியமானது. ஏனெனில் கடன் பெறுநர் கடனை திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில், பிணையாளி என்ற வகையில் அக்கடனை நீங்களே திருப்பிச் செலுத்த வேண்டியேற்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

## உங்களது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் (MyReport Plus)

**Report Header** - கடன் அறிக்கையின் தலைப்பானது பின்வரும் தகவல்களை உள்ளடக்குகின்றது.




| | | |
|---|---|---|
| **Reference Number** | - | அறிக்கைக்காக தானியங்கி முறையில் தொடராக உருவாக்கப்படும் தனித்துவமான இலக்கம் |
| **Requested by** | - | உள்ளகப் பயன்பாட்டாளரின் அடையாள இலக்கம். |
| **Report Created** | - | கடன் அறிக்கை வழங்கப்பட்ட திகதியும் நேரமும். |
| **Version** | - | அறிக்கையின் தற்போதைய பதிப்பு. |
| **Search Details** | - | தேடுதலுக்கான வழங்கப்பட்ட அளவுரு. |
| **Searched Name** | - | தேடலுக்கு பயன்படுத்திய கடனாளியின் பெயர். |
| **Searched ID No.** | - | தேடலுக்கு பயன்படுத்திய தே.அ.அ./கடவுச்சீட்டு/வியாபாரப் பதிவு இலக்கம். |
| **Searched Address** | - | சொந்தக் கடன் விசாரணை அறிக்கைக்கான விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தபால் முகவரி. |

குறிப்பு: சொந்தக் கடன் விசாரணை அறிக்கைக்கான விண்ணப்பத்தில் குறிப்பிட்டவாறு மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காட்டப்படும்.
முக்கியமானது: தனியாள் அறிக்கையின் உள்ளடக்கங்கள் இக்கைந்நூலில் தரப்படுகின்றன.

## கடன் அறிக்கையின் சுருக்க விபரங்கள் (Dashboard Details)

**Dashboard** என்பது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையில் தரப்படும் விடயங்களின் சுருக்க விபரமாகும். விடயங்களை விரைவாகப் பார்ப்பதற்கு இது பயன்படும். இதில் பின்வரும் சுருக்க விபரங்கள் காணப்படுகின்றன:

### Credit Score (கடன் புள்ளிகள்)

கடன் புள்ளியானது 250 தொடக்கம் 900 வரையிலான மூன்று இலக்க புள்ளியாகும். அதேவேளை அதிக கடன் புள்ளியானது குறைந்த அபாயத்தையும் குறைந்த கடன் புள்ளியானது அதிக அபாயத்தையும் கடன் வழங்குவோருக்குத் தெரிவிக்கின்றது. இது பற்றிய மேலதிக தகவல்களை அறிக்கையின் கடன் புள்ளி பகுதியில் காணமுடியும்.




**Score** - கடன் புள்ளி - கடன் தகவல்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட கடன் புள்ளி.
**Rick Grade** - அபாயத் தரம் - அபாயத்தின் தர வகைப்படுத்தல்
**Trend** - போக்கு - சமீப காலத்தில் கடன் புள்ளியில் ஏற்பட்ட மாற்றம் (கூடியது, குறைந்தது, மாறாத்தன்மை).

### Disputes (பிணக்கு)

விடயங்களும் கடன் வசதிகளும் தொடர்பான பிணக்குகள் பற்றிய சுருக்கத் தகவல்களை இது காட்டுகிறது. மேலதிக தகவல்களுக்கு அறிக்கையின் பிணக்குகள் பற்றிய பகுதியைப் பார்க்கவும்.




**Active Disputes** - தற்போதுள்ள பிணக்குகள் - தீர்க்கப்படாத பிணக்குகளின் எண்ணிக்கை.
**False Disputes** - உண்மையற்ற பிணக்குகள் - கடன் வழங்கும் நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்ட பிணக்குகள்.
**Registered in Court** - நீதிமன்றிலுள்ள பிணக்குகள் - நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள பிணக்குகள்.

### Payments Profile Status - செலுத்த வேண்டிய கடன்களின் விபரம்

இது முதன்மைக் கடன் பெற்றவர் அல்லது கூட்டுக் கடன் பெற்றவர் (உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன் வசதிகளைத் தவிர) என்ற வகையில் நீங்கள் பெற்ற கடன் வசதிகள் பற்றிய சுருக்கமான விபரத்தைத் தருகிறது. அனைத்து கடன் வசதிகளினதும் சுருக்கத்தை அதாவது மீள்செலுத்துகின்ற மற்றும் மீள்செலுத்தி முடிந்த அனைத்து கடன் வகதிகளையும் சுருக்கமாக கூறுகின்றது.



## Payments Profile - செலுத்தத் தவறிய கடன்களின் விபரம்

இந்த பகுதியானது கடந்த 24 மாதங்களுள் கடனை மீள் செலுத்த தவறிய நாட்களை குறிக்கும் கடன்களைக் காட்டுகிறது. அதாவது அனைத்து பெற்றுகொள்ளப்பட்ட கடன்களில் அதிகூடிய நிலுவை காணப்படும் நாட்களை (NDIA) கொண்ட கடன்களின் கடந்த 24 மாத வரலாற்றைத் தருகிறது.




- NDIA ஆனது **0-29** நாட்கள் எனின் - அந்த மாதத்துக்குரிய குறியீடு “பச்சை” நிறத்தில் "✓" என்றவாறு இருக்கும்.
- NDIA ஆனது **30-89** நாட்கள் எனின் - அந்த மாதத்துக்குரிய குறியீடு “செம்மஞ்சள்” நிறத்தில் “△” என்றவாறு இருக்கும்.
- NDIA ஆனது **90** நாட்களை விஞ்சுமாயின் - அந்த மாதத்துக்குரிய குறியீடு “சிவப்பு” நிறத்தில் “⊗” என்றவாறு இருக்கும்.

## Utilities & Insurances - பயன்பாட்டுக் கட்டணங்களும் காப்புறுதிக் கட்டணங்களும்

இந்த பகுதியில் தொலைபேசிக் கட்டணங்கள், மின் பட்டியல், நீர்ப் பட்டியல் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் போன்ற பிற்கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களின் சுருக்கம் காட்டப்படும்.

**Utilities**

| | | | |
|---|---|---|---|
| Number of Utility Accounts | 0 | Number of Different Providers | 0 |
| Total Current Amount in Arrears | LKR 0 | Highest Current NDIA | 0 |
| The Highest NDIA in 12 Months | 0 | | |

**Insurances**

| | | | |
|---|---|---|---|
| Number of Insurance Policies | 0 | Number of Claims | 0 |
| Total Current Amount in Arrears | LKR 0 | Highest Current NDIA | 0 |
| The Highest NDIA in 12 Months | 0 | | |

## Dishonoured Cheques (DC) – திருப்பப்பட்ட காசோலைகள்

இந்த பகுதியில் எல்லா வங்கிகளாலும், கணக்கில் போதிய பணமின்மை காரணமாகத் திருப்பப்பட்ட காசோலைகளின் பெறுமதி மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றின் சுருக்கம் தரப்படும்.

**Dishonoured Cheques**

| Number of Dishonoured Cheques | Weeks Since Last Dishonoured Cheque | Total Dishonoured Cheque Amount |
|---|---|---|
| 23 | 59 | LKR 6,66K |

## Relations - தொடர்புகள்

இந்தப் பகுதியானது ஏதாவது முறையில் பங்காண்மையாளராக அல்லது வியாபாரத்தின் உரிமையாளராக உள்ள தொடர்பைக் காட்டுகிறது.




## Inquiries - விசாரணைகள்

குறித்ததொரு காலப்பகுதிக்குள் நீங்கள் மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் உங்களைப் பற்றி பல்வேறு நிதி நிறுவனங்கள் (அங்கத்தவர்கள் / பங்களிப்பாளர்கள்) மேற்கொண்ட விசாரணைகள் பற்றிய தகவல்கள் தரப்படும்.




## Collaterals - பிணையங்கள்

பிணையங்களுடன் பெறப்பட்டுள்ள கடன் வசதிகள் பற்றிய தகவல்கள், அவ்வாறான கடன் வசதிகளின் எண்ணிக்கை. இங்கு முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதும் பகுதியளவில் பாதுகாக்கப்பட்டதுமான கடன் வசதிகள் பற்றிய தகவல்கள் இருக்கும்.




## தனிப்பட்ட தகவல்கள் (Subject Information)

இந்தப் பிரிவு கடன் வழங்கும் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டவாறான கடன் பெறுநரின் (தனிப்பட்ட / நிறுவன) தனிப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது. கடன் பெறுநரது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு இவை பயன்படும்.

இப்பிரிவு கடன் பெறுநரது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் (இலங்கையருக்கு இது கட்டாயமானது) / கடவுச்சீட்டு இலக்கம் (இலங்கையரல்லாதவர்களுக்கு இது கட்டாயமானது), சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் (சமர்ப்பிக்கப்பட்டிருந்தால்), பிறந்த திகதி, பால், குடியுரிமை, தொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் தொடர்பு இலக்கம் போன்ற, கடன் கொடுத்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கும்.

### Subject Information

| | | | | |
|---|---|---|---|---|
| Basic Information | **Full Name** | MARASINGHE WANNIARACHCHI KANKANAMGE | **Date of Birth** | 26-Mar-1234 |
| | **Gender** | Male | **Citizenship** | Sri Lankan |
| Additional Information | **Employment** | Employed | **Profession** | – |
| | **Employer Name** | HOSPITALNUWARAELIYA | **Business Name** | WANNIARACHCHI |
| Address | **Mail Address** | PIYASEWANA SINGHAGIRI, LUNUWILA WELIGAMA | **Permanent Address** | NO 870/1 RANMUTHUGALA ROAD KADAWATHA |
| | **City** | Weligama | **City** | KADAWATHA |
| | **Postal Code** | – | **Postal Code** | – |
| | **District** | Matara | **District** | – |
| | **Province** | Southern | **Province** | – |
| | **Country** | Sri Lanka | **Country** | – |
| Contacts | **Mobile Phone** | 0 790 555 599 | **Mobile Phone 2** | – |
| | **Phone Number** | 0 478 222 730<br>0 112 976 478 | **Phone Number 2** | – |
| | **Email** | – | | |
| Main IDs | **NIC** | 123456789v | **Driving License Number** | – |
| | **Passport** | – | **Business Registration Number** | – |
| | **Business Registration Date** | – | | |

குறிப்பு: இங்கு தனிப்பட்ட அறிக்கையொன்று உதாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறே நிறுவனமொன்றுக்கான கடன் அறிக்கையில் அதற்கான தகவல்கள் காட்டப்படும்.

History of Distinct Names

| Institution | Changed Value | Valid From |
|---|---|---|
| SAMPATH BANK PLC | UDITHA MANO LEELARATHNE LIYANAGE | 31-Oct-2020 |
| COMMERCIAL CREDIT AND FINANCE PLC | MR UDITHA MANO | 31-Jan-2018 |
| COMMERCIAL BANK OF CEYLON PLC | UDITHA MANO LILARATNA LIYANAG | 28-Feb-2017 |
| PEOPLES BANK | LIYANAGE LEELARATHNA LIYANAGE | 31-Jan-2017 |
| NATIONS TRUST BANK PLC | LEELARATHNA LIYANAGE UDITHA MANO | 31-Jan-2017 |
| NATIONAL SAVINGS BANK | UDITHA MANO LEELARATHNE LIYANAGE | 31-Jan-2017 |
| PEOPLE'S LEASING AND FINANCE PLC | UDITHA LIYANAGE LEELARATHNA | 31-Jan-2017 |

Other Historical Changes

| Category | Changed Value | Valid From | Valid To |
|---|---|---|---|
| Mail Address | NO 47/2 NAWAM MAWATHA, NAWAMGODA HAWAELIYA, | 31-Aug-2017 | 30-Sep-2017 |
| Mail Address | BASE HOSPITAL NUWARA ELIYA | 31-Jan-2017 | 31-Jan-2017 |
| Mail Address | BASE HOSPITAL, NURSE`S QUARTERS | 31-Jan-2017 | 31-Dec-2017 |

| Category | Changed Value | Valid From | Valid To |
|---|---|---|---|
| Permanent Address | BERALELIYA WELIPITIYA WELIGAMA | 31-Jan-2017 | 31-Jan-2017 |
| Permanent Address | BASE HOSPITAL, NURSE`S QUARTERS | 31-Jan-2017 | 31-Dec-2017 |

| Category | Changed Value | Valid From | Valid To |
|---|---|---|---|
| Mobile Number | 0 112 976 478 | 31-Jan-2017 | 31-Dec-2017 |

## Historical Information – வரலாற்றுத் தகவல்

முக்கிய தகவல்களில் ஏற்பட்ட மாற்றங்களின் வரலாற்றுப் பதிவுகள் இதில் அடங்கும். பணியகம் தகவல்களில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து மாற்றத்தின் திகதியை பதிவு செய்கின்றது. இதனால் தகவல் துல்லியமாகவும் புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்கும்.

### History of Distinct Names - பெயர்களில் ஏற்படும் மாற்றங்கள்

பெயர்கள் ஏற்பட்ட மாற்றங்களின் வரலாற்றுப் பதிவுகள் இதில் அடங்கும். கடன் வழங்குவோரால் அறிவிக்கப்படும் பெயர்களில் ஏற்படும் மாற்றங்களைப் பணியகம் கண்காணித்து மாற்றத்தின் திகதியுடன் பதிவு செய்யும். கடன் வழங்கும் நிறுவனத்தின் பெயரும் சொந்தக் கடன் விசாரணை அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றது.

### Other Historical Changes - ஏனைய வரலாற்று மாற்றங்கள்

தபால் முகவரி, நிரந்தர முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொழில் விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியன பணியகத்தால் கண்காணிக்கப்பட்டு, மாற்றப்பட்ட திகதியுடன் காட்டப்படும்.

குறிப்பு: மாற்றங்கள் நிகழும்போதும், தற்போதுள்ள தரவுகளைப் பார்க்கும்போதும், "செல்லுபடியாகும் காலத்திலிருந்து" "செல்லுபடியாகும் காலம் வரை" ஆகியன குறிக்கும் திகதிகள் மிக முக்கியமானவையாகும்.

## கடன் புள்ளி (Scoring)

கடன் புள்ளி என்பது, பண்பு சார்ந்த தகவல்களை அளவு சார்ந்ததாக மாற்றுவதன் மூலம் முடிவெடுக்கும் செயல்முறையை எளிதாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் உரியதாகும். இது சொந்தக் கடன் விசாரணை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அதேவேளை பின்வரும் முக்கிய அம்சங்களைக் கொண்டு ஒரு கணிப்பீட்டுப் படிமுறையைப் பயன்படுத்திக் கணிக்கப்படும். அது **MyReport Plus** இலும் (சொந்த விசாரணையில் தரப்படும்), **Credit Report Plus** இலும் (அங்கத்துவ நிறுவனத்துக்குக் கிடைக்கத்தக்கது) உள்ளடக்கப்படும்.

- பணம் செலுத்தும் தன்மை
- அதிகப்படியான கடன்
- மக்களியல் விபரங்கள் (Demographic details)
- கிடைக்கும் கடனை பயன்படுத்துதல்
- சமீபத்திய விசாரணைகளின் எண்ணிக்கை
- உத்தரவாதமளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள்
- மறுக்கப்பட்ட காசோலைகள்

கடன் புள்ளியானது 250 தொடக்கம் 900 வரையிலான மூன்று இலக்கப் புள்ளியாகும். அதேவேளை அதிக கடன் புள்ளியானது குறைந்த அபாயத்தையும் குறைந்த கடன் புள்ளியானது அதிக அபாயத்தையும் கடன் வழங்குபவருக்கு வழங்குகின்றது. கடன் பற்றிய தகவல்களில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப கடன் புள்ளியானது மாற்றமடையக்கூடியது.

### கடன் புள்ளி ஏன் முக்கியமானதாகும்?

கடன் புள்ளியும் அது தொடர்பான அபாயத்தின் தரமும் கடன் பெறுபவரது நன்மதிப்பை கடன் கொடுப்பவர் மதிப்பிடுவதற்கான மிகச்சிறந்த குறிப்பாக அமைகிறது.

கடன் புள்ளியானது பின்வரும் நன்மைகளை வழங்குகின்றது:

- கடன் வழங்கும் நிறுவனங்கள் பார்ப்பதற்கு முன்னர், கடன் புள்ளியை நீங்கள் பார்க்க உதவுகிறது.
- கடன் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் தொடர்புபட்டுள்ள நேரத்தையும் செலவையும் குறைப்பதில் கடன் வழங்குவோருக்கு உதவுகிறது.
- கடனை திருப்பிச் செலுத்தும் பழக்கத்தையும் நடத்தையும் மறுசீரமைக்க உங்களுக்கு உதவுகிறது.
- கடன் பயன்பாட்டை நெறிப்படுத்த உதவுகிறது.
- ஒழுக்கமான கடன் பெறுபவராக இருப்பதற்கு உதவுகின்றது.

## கடன் புள்ளிக்கான பகுதியின் உள்ளடக்கம்

Scoring

| 546 | D1 | → | 40.86% |
|---|---|---|---|
| Score | Risk Grade | Trend | Probability of Default |

Score History




| Month | Aug 21 | Sep 21 | Oct 21 | Nov 21 | Dec 21 | Jan 22 | Feb 22 | Mar 22 | Apr 22 | May 22 | Jun 22 | Jul 22 | Aug 22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Score | 250 | 250 | 485 | 485 | 486 | 495 | 495 | 535 | 535 | 540 | 542 | 547 | 546 |
| Risk Grade | E3 | E3 | E1 | E1 | E1 | E1 | E1 | D2 | D2 | D1 | D1 | D1 | D1 |
| Probability of default | 100 | 100 | 73.88 | 73.88 | 73.43 | 69.18 | 69.18 | 47.12 | 47.12 | 44.25 | 43.11 | 40.3 | 40.86 |

**Score** **- கடன் புள்ளி** - கடன் தகவல் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தற்போதைய கடன் புள்ளி

**Rick Grade** **- அபாயத் தரம்** - அபாயத் தர வகைப்படுத்தல்

**Trend** **- போக்கு** - சமீப காலத்தில் கடன் புள்ளிக் கணிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றம் (கூடியது, குறைந்தது, மாறாத்தன்மை).

**Probability of Default** **- மீளச்செலுத்தாமைக்கான நிகழ்தகவு**
- குறித்த கால எல்லையில் கடனை மீளசெலுத்தாமல் போவதற்கான சாத்தியக்கூறு.

**Score History** **- கடன் புள்ளியின் வரலாறு**
- கடைசி 12 மாதங்களினுள் கடன் புள்ளியில் ஏற்படும் மாற்றம்.

Top Reason Codes

| Reason Code | Description |
|---|---|
| BAD1 | Customer in default |
| MSN1 | Negatively closed credit facility last 6 months |
| PAC1 | Very high overdue amount last 2 months |
| PDO1 | High ratio of due to total loan amount last 12 months |
| SXD2 | Evidence of bad payment behavior during last 2 years |

Scoring Legend




| | | | |
|---|---|---|---|
| ● | **A1-A3** | **Very Low Risk** | Based on Credit Histories |
| ● | **B1-B3** | **Low Risk** | Based on Timely Payment Behavior |
| ● | **C1-C3** | **Average Risk** | Based on Irregularities in Repayment of Over Indebtedness |
| ● | **D1-D3** | **High Risk** | Based on High Probability of Defaulting on a Credit Facility |
| ● | **E1-E3** | **Very High Risk** | Based on Default or Extreme Irregularities in Servicing Credit Facility |
| ● | **XX** | **Not Scored** | Insufficient Information in the Database |

**Top Reason Codes** - (கடன் புள்ளியைப் பாதிக்கும் பிரதான காரணங்களின் குறியீடுகள்) - ஒரு குறிப்பிட்ட அபாயத் தரத்தில் / வகையில் உள்ள வகுப்பாக்கத்தின் காரணமாக வழங்கப்படும் பிரதான காரணங்களின் குறியீடுகளை இது குறிக்கிறது. இந்தக் குறியீட்டையும் இந்த அபாயத் தரத்தையும் ஏற்படுத்திய சம்பவங்களை அடையாளங் காண்பதற்குரியதும் அதற்குரியதுமான விபரங்களுடனான உள்ளகக் காரணக் குறியீட்டை இது குறிக்கிறது.

**Scoring Legend** - ஒவ்வொரு அபாயத் தரத்திற்குமான கடன் புள்ளிப் பெறுமான ஒதுக்கீட்டை வரைபு மூலம் விளக்குவதை இது காட்டுகிறது.

குறிப்பு: கடன் புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் போதுமான தரவுகள் காணப்படாவிடின், அபாயத் தரம் "**XX**" என, "தரவுத்தளத்தில் போதுமான தகவல்கள் இல்லை" என்ற குறிப்புடன் காட்டப்படும்.

முக்கியமானது: **MyReport Plus** ஆகியவற்றில் உள்ள தகவல்களுக்கு எதிராக மாத்திரமே ஆட்சேபணை தெரிவிக்க முடியும்; கடன் புள்ளிக்கு எதிராக அல்ல.

## கடன் வசதிகள் (Credit Facility)

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதிகளிலிருந்து தோன்றும், கடன் பெறுநரது தற்போதைய மற்றும் எதிர்காலப் பொறுப்புகள் தொடர்பான சுருக்கத் தகவல்களை இந்தப் பிரிவு காட்டுகின்றது. இந்தப் பொறுப்புகளில் தனிப்பட்ட / நிறுவனக் கடன் வசதிகள், கூட்டாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வசதிகள் மற்றும் பிணையளிக்கப்பட்ட கடன் வசதிகள் யாவும் உள்ளடங்குகின்றன.

Debtor Summary per Sector - Last 5 Years (Amounts in LKR)

| Institution Category | Open Credit Facility | Closed Credit Facility | Credit Facilities in Arrears | Total Monthly Payments | Total Current Balance | Total Amount Granted | Total Amount in Arrears | Highest NDIA |
|---|---|---|---|---|---|---|---|---|
| License Commercialized Banks | 17 | 17 | 4 | 7,774,479 | 19,550,115 | 33,016,755 | 90,833 | 720 |
| License Finance Companies | 5 | 3 | 3 | 436,889 | 20,820,930 | 30,340,000 | 1,687,659 | 195 |
| License Leasing Companies | 0 | 0 | 0 | - | - | - | - | 0 |
| | | | | **8,211,368** | **40,371,045** | **63,356,755** | **1,778,492** | |

**கடன் பெற்றவரின், துறை ரீதியான கடைசி 05 வருடச் சுருக்கம் (இலங்கை ரூபாவில்)**

கடன் பெற்ற ஒருவரது திரட்டப்பட்ட தகவல்களை, அவர் கடன் பெற்ற துறை ரீதியாக (நிறுவன வகைகள்) இந்தச் சுருக்கம் தருகிறது. இதில் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய கடன் வசதிகள், மாதாந்த மொத்தக் கொடுப்பனவுகள், மாதாந்த மொத்த நிலுவை, வழங்கப்பட்ட மொத்தத் தொகை, நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை, ஆகக்கூடிய NDIA உடனான நிலுவையாகவுள்ள கடன் வசதிகளின் எண்ணிக்கை ஆகியன கடந்த **05** வருடங்களுக்கு, ஒவ்வொரு கடன் துறைக்கும் உள்ளடக்கப்படும். இதிலுள்ள எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்படும்.

Guarantor Summary per Sector - Last 5 Years (Amounts in LKR)

| Institution Category | Open Credit Facility | Closed Credit Facility | Credit Facilities in Arrears | Total Monthly Payments | Total Current Balance | Total Amount Granted | Total Amount in Arrears | Highest NDIA |
|---|---|---|---|---|---|---|---|---|
| License Commercialized Banks | 1 | 0 | 1 | 24,053 | 138,003 | 1,000,000 | 24,053 | 58 |
| License Finance Companies | 0 | 0 | 0 | - | - | - | - | 0 |
| License Leasing Companies | 2 | 0 | 0 | 0 | 1,646 | 25,000,000 | 0 | 0 |
| | | | | **24,053** | **139,649** | **26,000,000** | **24,053** | |

## பிணையளிக்கப்பட்ட கடன்களின் கடைசி 05 வருடச் சுருக்கம் (இலங்கை ரூபாவில்)

பிணையாளரது திரட்டப்பட்ட தகவல்களின் சுருக்கம் பெற்ற துறை ரீதியாக (நிறுவன வகைகள்) இதில் தரப்படுகிறது. இதில் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய கடன் வசதிகள், மாதாந்த மொத்தக் கொடுப்பனவுகள், மாதாந்த மொத்த நிலுவை, வழங்கப்பட்ட மொத்தத் தொகை, நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை, ஆகக்கூடிய NDIA உடனான நிலுவையாகவுள்ள கடன் வசதிகளின் எண்ணிக்கை ஆகியன கடந்த **05** வருடங்களுக்கு, ஒவ்வொரு கடன் துறைக்கும் உள்ளடக்கப்படும். இதிலுள்ள எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்படும்.

## அனைத்து கடன் வசதிகளின் பட்டியல்

≡ List of All Credit Facilities 1–7

| Credit Facility Index | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| Institution Category | LCB | LCB | LCB | LCB | LCB | LCB | LCB |
| Member | 7162 | 7214 | 7311 | 7278 | 7278 | 7092 | 7056 |
| Branch | 900 | 1100 | 100 | 960 | 960 | 001 | 121 |
| Credit Facility Type | CRCD | CRCD | CRCD | CRCD | CRCD | CRCD | OVDR |
| Credit Facility Status | ACTV | ACTV | ACTV | ACTV | ACTV | CLSD | ACTV |
| Ownership Indicator | PCD | PCD | PCD | PCD | PCD | PCD | OWN |
| Currency | LKR | LKR | LKR | LKR | LKR | LKR | LKR |
| Amount Granted/Limit | 500,000 | 1,000,000 | 600,000 | 37,500 | 37,500 | 530,000 | 0 |
| Current Balance | 501,435 | 770,789 | 346,615 | 37,753 | 39,681 | 544,852 | 0 |
| Amount in Arrears | 0 | 56,288 | 0 | 37,753 | 39,681 | 0 | 0 |
| Installment Amount | – | 13,224 | – | – | – | – | – |
| Amount Written Off | – | – | – | – | – | 0 | – |
| Last Update Date | 30-Nov-2021 | 30-Nov-2021 | 30-Nov-2021 | 30-Nov-2021 | 31-Oct-2021 | 30-Nov-2021 | 31-Dec-2021 |
| First Disbursement Date | 18-Oct-2019 | 11-Oct-2019 | 06-Mar-2017 | 03-Apr-2005 | 03-Apr-2005 | 17-Jun-2010 | 31-Aug-2020 |
| Last Payment Date | 28-Jul-2021 | 19-Nov-2021 | 26-Nov-2021 | 05-Nov-2021 | 10-Aug-2021 | 04-Aug-2021 | – |
| Restructuring Date | – | – | – | – | – | – | – |
| Credit Facility End Date | – | – | – | – | – | 12-Nov-2021 | – |
| Repayment Type | DMND | DMND | DMND | DMND | DMND | DMND | DMND |
| Purpose of Credit Facility | 07:03:001 | 07:03:001 | 07:03:001 | 07:03:001 | 07:03:001 | 07:03:001 | 09:01:001 |
| Security Coverage | US | US | US | US | US | US | US |
| Guarantee Coverage | NG | NG | NG | NG | NG | NG | NG |
| Entity Code | C3 | C4 | C5 | C6 | C7 | C9 | C2 |

## அனைத்துக் கடன் வசதிகளின் பட்டியல்

இந்தப் பகுதியானது முதன்மைக் கடன் பெறுநரின் கடன் வசதிகள், கூட்டுக் கடன் வசதிகள் மற்றும் பிணையாளர்கள் ஆகியோரது கடன் வசதிகள் பற்றிய தகவல்களைக் காட்டுகிறது. கடன் வசதியை வழங்கிய நிறுவனத்தின் வகை, கடன் வசதியின் வகை, கடன் வசதி நிலுவையிலுள்ளதா அல்லது முடிக்கப்பட்டுள்ளதா என்பது, பெற்ற கடன் தொகை, நிலுவைத் தொகை, முன்னர் நிலுவையாகவிருந்த தொகையும் நிலுவை நாட்களும் ஆகியவற்றையும் இது காட்டுகிறது. இப்பகுதியில் தரப்படும் பெரும்பாலான தகவல்கள் ''பட்டியலிடப்பட்ட பெறுமதி''யில் தரப்படுகின்றன. இந்த அறிக்கையின் இறுதியில் ''விளக்கங்கள்'' என்ற பிரிவில் உரிய பட்டியலிடப்பட்ட பெறுமதிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
பணியகத்தால் தற்போது பயன்படுத்தப்படும் பட்டியலிடப்பட்ட பெறுமதிகள், உங்களது தகவலுக்காகக் கீழே தரப்படுகின்றன (இவை ஜனவரி 2023 இல் உள்ளவாறு).

**Credit Facility Index** - இது கடன் வசதிகளின் வரிசை எண்ணைக் குறிக்கின்றது

**Institution Category** - கடன் வழங்கும் நிறுவனங்களின் பின்வரும் வகையைத் தருகிறது:

- **LCB** - உரிமம் பெற்ற வர்த்தக வங்கி
- **LSB** - உரிமம் பெற்ற விசேட வங்கி
- **LLC** - உரிமம் பெற்ற குத்தகைக் கம்பனி
- **LFC** - உரிமம் பெற்ற நிதிக் கம்பனி
- **OOG** - மற்றைய கடன் வழங்கும் நிறுவனங்கள்

**Member & Branch (Institution & Branch) -** கடன் வசதி பற்றிய தகவலை வழங்குகின்ற அங்கத்துவ நிறுவனத்தையும் அதன் கிளையையும் குறிக்கின்றது. நிறுவனத்தினதும் கிளையினதும் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடன் அறிக்கையிலுள்ள பட்டியல் விபரங்களைப் பார்க்கவும்.

**Credit Facility Type** - பின்வருமாறு காட்டப்படும் கடன் வசதியின் வகையை இது குறிக்கிறது:

**BKGR** - Bank Guarantee/வங்கி உத்தரவாதம்
**CRCD** - Credit Card/ கடன் அட்டை
**HRPH** - Hire Purchase/ தவணைக் கொள்முதல்
**LEAS** - Leasing/ குத்தகை
**LOAN** - Loan /கடன்
**MILN** - Micro Loan/நுண் கடன்
**OVDR** - Overdraft/ மேலதிகப்பற்று
**LTCR** - Letter of Credit/கடனுறுதிக்கடிதம்
**CODU** - Consumer Durables / நுகர்வோர் சாதனங்களிற்கு எதிராகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்
**FACT** - Factoring/ மாற்று உண்டியலுக்கான பணவாக்கம்
**AAIB** - Advances Against Import Bills/இறக்குமதி விலைப்பட்டியலுக்கு எதிரான கடன்கள்
**BILD** - Bills Discounting/ விலைப்பட்டியல் தள்ளுபடி
**OTHR** - Other Credit/ ஏனைய கடன்
**BGCN** - Bank Guarantee - Construction Related/ வங்கி உத்தரவாதம் கட்டுமானம் தொடர்பானது
**COCR** - Corporate Credit Card/ நிறுவன கடன் அட்டை
**BGNC** - Bank Guarantee - Non Construction Related வங்கி உத்தரவாதம் கட்டுமானம் தொடர்பற்றது
**HYPO** - Hypothecation/அனுமானம்
**APRS** - Advances Against Export Pre Shipment/ ஏற்றுமதிக்கு எதிரான ஏற்றுமதிக்கு முந்திய முற்பணங்கள்
**APTS** - Advances Against Export Post Shipment/ ஏற்றுமதிக்கு எதிரான ஏற்றுமதிக்கு பிந்திய முற்பணங்கள்
**CMBF** - Combined Facility/ ஒருங்கிணைந்த கடன் வசதி

**Credit Facility Status** - கடைசியாக வழங்கப்பட்ட தரவுகளில் கடன் வசதிகளின் நிலை பின்வருமாறு:

**ACTV** - Active/ தற்போது செயலில் உள்ள கடன்கள்
**LGAL** - Legal Action/ சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
**LBGV** - Liability Assumed by Government/ பொறுப்பு அரசினால் ஏற்கப்பட்டுள்ளது.
**NATD** - Natural Disaster Affected/ இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்டுள்ளது.
**CLSD** - Closed/ மூடப்பட்டுள்ளது
**RSHD** - Rescheduled/ மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
**SETL** - Settled/ செலுத்திமுடிக்கப்பட்டுள்ளது
**TRMN** - Terminated/ நிறுத்தப்பட்டுள்ளது
**WRTN** - Written Off/ பதிவழிக்கப்பட்டுள்ளது
**R&SL** - Repossessed & Sold/ பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்பட்டுள்ளது
**R&ST** - Repossessed & Settled/ பறிமுதல் செய்யப்பட்டு பின்பு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது
**PACT** - Parate Action/ வங்கியில் அடகு வைக்கப்படவற்றை விற்கும் நடவடிக்கை
**ARBT** - Arbitration/ நடுத்தீர்ப்பு
